தீட்டப்பட்டிருப்பது பற்றி நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். இவைகளெல்லாம் அவசர காலத்திற்கு இருக்கின்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தீட்டப்பட்ட திட்டங்களாகும். எப்ரல் மாதம் முதல் தேதிக்குள் 100 கிணறுகள் எடுக்கப்பட்டுவிடும். இந்த மூன்று குளம் பகுதிகளிலும் ஐந்தாறு கிணறுகள் வெட்டியெடுத்து தண்ணீர்ப் பற்றுக்குறையை நீக்கிவிட முடியும்.

குடி நீர் வசதிகள்.

**438 வினு—திரு பெ. மலேச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், நத்தத்திற்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காக அதற்கு அண்மையில் உள்ள விரிச்சலாற்றில் கிணறு அமைக்கும் திட்டம் என்னவாயிற்று ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நத்தத்திற்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் இல்லே.

**திரு பெ. மலேச்சாமி :** நத்தம் ஒரு பேரூராட்சியாகும். இந்த ஊரில் தற்போது மேல்நிலைத் தொட்டி கூட இயங்கவில்லே. விரிச்சலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்குத் திட்டம் இருந்ததாகச் சில அதிகாரிகள் கூறியிருக்கிருர்கள். எனவே, அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக மேலும் ஏதாவது ஆய்வு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1961-ம் ஆண்டு எடுத்த ஜனன மரணக் கணக்கின்படி அங்கே 12,757 பேர்தான் மக்கள் தொகை என்று கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மூன்று கிணறுகள் இருக்கின்றன. பற்றுக்குறையை நீக்குவதற்காக மேலும் இரண்டு கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே இப்பொழுது இந்த ஆண்டு ஒதுக்கிய ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தில் அந்த நத்தம் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் எதும் சேர்க்கப்படவில்லே. அதிலும் குறிப்பாக, விரிச்சலாற்றிலிருந்து நத்தத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் செயற்குறிப்பு எப்போதுமே இருந்திருக்கவில்லே.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலேவர் அவர்களே, இந்தக் குடி தண்ணீர்ப் பிரச்சினையைப்பற்றி மூன்று கேள்விகள் இருக்கின்றன. ஒன்று, மருத்துவ மனைக்குக் குடி தண்ணீர் கொண்டுவருவது பற்றியது. இரண்டாவது நத்தத்திற்கு. மூன்ருவது, திருப்பரங்குன்றத்திற்கு. இப்படி இருக்கிறது. பொதுவாக நாடு பூராவுமே குடி தண்ணீர்ப் பஞ்சம் இன்றைய தினம் இருக்கிற காரணத்தினுலே, இதை நிவர்த்திப்பதற்கு ''வாட்டர் போர்டு'' ஒன்று அமைத்து, பரவலாக எல்லா இடங்களுக்கும் கிடைக்கத்தக்க அளவுக்கு சர்க்கார் ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** "வாட்டர் போர்டு" ஒன்று அமைக்கவேண்டும் என்கிற எண்ணம் அதிகாரிகள் மத்தியில் இருந்து, அதுபற்றி வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனுல், இன்னமும் அரசாங்கம் அதுகுறித்து எந்த முடிவும் எடுக்கவில்லே. ஆனுல், பொதுவாக, தற்போது பருவமழை பொய்த்து அதன் காரணமாக எல்லா இடங்களிலும் தண்ணீர் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதற்காக, அவசர அவசரமாக எந்த எந்தப் பகுதிகளில் மிக மிகக் கவனம் செலுத்த வேண்டுமோ அந்தப் பகுதிகளில் எல்லாம் அவசரமாக கவனம் செலுத்தி வருகிறோம். ஆனுல், கோவை உதகை, கோவில்பட்டி, ஆவடி போன்ற இன்னும் பல பகுதிகளில் அவசரமாக சில திட்டங்களேயெல்லாம் தீட்டி உடனடியாகத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவெடுத்து உடனுக்குடன் செய்துகொண்டுதான் வருகிறது.